**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 161/2023**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் தேதி வெள்ளி கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஏகஜெனி | தொழில் | : கூலிவேலை |
| கணவர் பெயர் | : வேணுகோபால் | சமயம் | : |
| கிராமம் | : மட்டப்பாறை | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 35 |

சாட்சியையும் எதிரியும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. திரு. E. ஜெயசங்கர் H.C - 1931 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் மட்டப்பாறை கிராமத்தில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன ரேணுகோபால் என் கணவர்.

2. கடந்த 08.06.2022 ந் தேதி என் கணவர் அவரது இருசக்கர வாகனத்தில் மட்டப்பாறையில் இருந்து செஞ்சிக்கு போனார். அப்போது என் கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த அரசு பேருந்து (விழுப்புரம் டு வேலூர் செல்லும் பேருந்து) என் கணவரின் பைக்கில் மோதி விபத்து ஏற்பட்டது. அப்போது விபத்தில் என் கணவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு நசுங்கி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். மேற்படி விபத்தானது மட்டப்பாறை பேருந்து நிறுத்தம் அருகில் பாலம் உள்ளது அதற்கு அருகில் நடந்தது. அந்த விபத்தை என் தம்பி புன்னியமூர்த்தி எனக்கு போன் செய்து சொன்னார். நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது என் கணவரின் தலை நசுங்கி இறந்து கிடந்தார். பின்னர் விபத்து சம்மந்தமாக அனந்தபுரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். பிறகு பிரேத பரிசோதனை செய்து செஞ்சி அரசு மருத்துவமனையில் சடலத்தை கொடுத்தார்கள். போலிசார் விசாரித்தனர்.

**(1. 08.06.2022 தேதியிட்ட புகார் அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்குவிசாரணை:**

நான் கொடுத்த புகாரில் கையெழுத்து மட்டும் போட்டேனா என்றால் நான் சொன்ன விவரத்தை எழுதியதை நான் கையொப்பம் செய்தேன். மட்டப்பாறை கூட்ரோட்டில் பேருந்து நிறுத்தம் உள்ளதா என்றால் உள்ளது. பேருந்து நிறுத்தாமல் வேகமாக வந்து மோதியதில் தான் விபத்து நடந்ததாக சாட்சி கூறுகிறார். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் போன் மூலம் தகவல் வந்தபிறகு தான் விபத்து பற்றி தெரியும் என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் என் கணவர் சென்ற இரு சக்கர வாகனத்திற்கு பின்னால் வந்த அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டது என்றுதான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்த பிறகு என் கணவரின் இருசக்கர வாகனத்தை நான் பார்த்தேனா என்றால் போலிசார் எடுத்து சென்று காவல் நிலையத்தில் வைத்திருந்தார்கள். அதை பார்க்கவில்லை. பேருந்தை ஓட்டியவர் பெயர், விவரம் தெரியுமா என்றால் தெரியவில்லை. ஜீவகன் என்பவர் தான் ஓட்டியதாக சொன்னார்கள். இன்றுதான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன்.

என் கணவருக்கு குடிப்பழக்கம் இருந்தது என்றால் இருந்தது. கடைசியாக இரண்டரை மாதம் குடிக்காமல் இருந்தார். நான் கூறுவது போல் அரசு பேருந்து ஓட்டி வந்த ஓட்டுனரின் கவனக்குறைவால் விபத்து நடக்கவில்லை என்றாலும் என் கணவர் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தை பேருந்தில் மோதி விபத்து ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. என் கணவரின்இருசக்கர வாகனத்தில் முன் பக்கத்தில் தான் அடிப்பட்டுள்ளது என்றாலும் பின்பக்கத்தில் அடிப்படவில்லை என்றாலும் சரியல்ல. அரசு பேருந்து வேகமாக வந்து மோதிவிட்டது என்று சாட்சி கூறுகிறார். நான் கூறுவது போல் என் கணவர் இருசக்கர வாகனத்தின் பின்பக்கத்தில் பேருந்து மோதியிருந்தால் இருசக்கர வாகனத்தின் பின்புறத்தில் வாகன சேதம் ஏற்பட்டிருக்கும் அவ்வாறு பின்பக்கத்தில் மோதாததால் தான் எந்த சேதாரமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. செஞ்சி முதல் விழுப்புரம் செல்லும் சாலையானது வடக்கு தெற்காக அமைந்துள்ளது என்றால் சரிதான். மட்டப்பாறை சாலையானது கிழக்கு மேற்காக அமைந்துள்ளது என்றால் சரிதான். என் கணவர் இருசக்கர வாகனத்தில் மட்டப்பாறை சாலையை கடக்கும்போது தான் என் கணவரின்

கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. என் கணவர் சாலையில் நேராக சென்றபோதுதான் பின்பக்கமாக வேகமாக பஸ் வந்து மோதியதில் தான் விபத்து ஏற்பட்டதாக சாட்சி கூறுகிறார். விபத்து நஷ்ட ஈடு வழக்கில் நஷ்ட ஈடு வாங்கிவிட்டேனா என்றால் இல்லை. வழக்கு நிலுவையில் உள்ளது. நஷ்ட ஈட்டிற்காக பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 161/2023**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01ம் தேதி வெள்ளி கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : புண்ணியமூர்த்தி | தொழில் | : தனியார் வேலை |
| தந்தை பெயர் | : பழனி | சமயம் | : |
| கிராமம் | : மட்டப்பாறை | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 29 |

சாட்சியையும் எதிரியும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. திரு. E. ஜெயசங்கர் H.C - 1931 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் மட்டப்பாறை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஏகஜெனி எனக்கு உறவு முறையில் அக்கா. இவ்வழக்கில் இறந்துபோன வேணுகோபால் எனக்கு உறவுமுறையில் மாமா.

2. விபத்து நடந்த தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பாக மதியம் 1, 1.30 மணியளவில் எனது சொந்த வேலை காரணமாக செஞ்சியில் இருந்து மட்டப்பாறை நோக்கி இருசக்கர வாகனத்தில் நான் சென்று கொண்டிருந்தேன். அப்போது மட்டப்பாறை கூட்ரோட்டில் இருந்து சுமார் 500 மீட்டர் தள்ளி என் மாமா வேணுகோபால் இருசக்கர வாகனத்தில் செஞ்சி நோக்கி வந்தபோது பின்பக்கமாக வந்த அரசு பேருந்து அதிவேகமாக வந்ததில் அவர் மீது மோதி டயரில் சிக்கி விபத்துக்குள்ளானது. சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி அவர் இறந்துவிட்டார். விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தைஓட்டியவர் ஆஜர் எதிரிதான். விபத்தில் நான் தான் நேரடியாக பார்த்தேன். உடனே விபத்து பற்றி அக்கா ஏகஜெனிக்கு தகவல் கொடுத்தேன். இறந்துபோன சடலத்தை செஞ்சி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்றார்கள். விபத்து சம்மந்தமாக அனந்தபுரம் காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்தோம். பிறகு அரசு மருத்துவமனையில் சடலத்தை பிரேத பரிசோதனை செய்து கொடுத்தார்கள்.

விபத்தானது மட்டப்பாறை பேருந்து நிறுத்தம் அருகில் பாலம் உள்ளது அதற்கு அருகில் போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை:**

இவ்வழக்கில் இறந்துபோன வேணுகோபால் எனக்கு மாமாவா என்றால் எனக்கு தாய்மாமா உறவுமுறை. என் மாமா பேருந்தில் வலது பக்க டயரில் மாட்டிக்கொண்டாரா இடது பக்க டயரில் மாட்டிக்கொண்டாரா என்றால் செஞ்சி நோக்கி வந்த பேருந்தில் இடது பக்க டயரில் மாட்டிக்கொண்டார். விபத்து நடந்த பிறகு என் மாமா ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். என் மாமா ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் முன்பக்கத்தில் சேதாரம் ஏற்பட்டதா அல்லது பின்பக்கத்தில் சேதாரம் ஏற்பட்டதா என்றால் பின்பக்கத்தில் சேதாரம் ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தில் முன்பக்கத்தில் சேதாரம் ஏற்படவில்லையா என்றால் இருசக்கர வாகனமே பேருந்தில் மாட்டிக்கொண்டு சுக்குநூறாக ஆகிவிட்டதாக சாட்சி கூறுகிறார். கூட்டமாக இருந்ததை போய் பார்த்தபோதுதான் விபத்தில் இறந்தவர் என் மாமா என்று எனக்கு தெரியவந்ததா என்றால் ஆமாம். நான் போவதற்கு முன்பாகவே என் மாமா பஸ்ஸில் மாட்டிக்கொண்டாரா என்றால் ஆமாம். பேருந்தில் டயரில் மாட்டி தேய்த்து கொண்டு போகும்போதே நேரில் பார்த்துக்கொண்டு சென்று பார்த்தேன். அப்போது தான் விபத்தில் மாட்டிக்கொண்டது என் மாமா என்று தெரியவந்ததாக சாட்சி கூறுகிறார். எவ்வளவு தூரத்தில் இருந்து நான் பார்த்தேன் என்றால் 500 மீட்டர் தூரத்தில் பார்த்தேன். சத்தம் கேட்டுதான் பார்த்தேனா என்றால் விபத்தையும் பார்த்தேன்,சத்தத்தையும் கேட்டேன். பேருந்தின் எண்ணை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. விபத்து நடந்த அருகாமையில் ஒயின்ஷாப் உள்ளது என்றால் உள்ரோட்டில் 3/4 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. விபத்து நடந்த இடத்திற்கும் ஒயின் ஷாப் ரோடு வந்து ஏறும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 800 மீட்டர் இருக்கும். நான் கூறுவது போல் ஆஜர் எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றாலும் என் மாமா குடிபோதையில் இருசக்கர வாகனத்தை ஓட்டிக்கொண்டு வந்து விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. விபத்தை நான் நேரில் பார்த்திருந்தால் இருசக்கர வாகனத்தில் ஏற்பட்ட சேதத்தை சரியா

சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்துபோனவர் என் மாமா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தில் வேறு யாரும் எனக்கு தெரிந்தவர் இல்லை என்றால் எனது சித்தப்பா தயாளன் இருந்தார். முதலில் எனது சித்தப்பா தயாளன் வந்தபிறகு தான் நான் அங்கு சென்றேனா என்றால் ஆமாம்.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.

**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C. 161/2023**

2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01ம் தேதி வெள்ளி கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தயாளன் | தொழில் | : தனியார் பேருந்து நடத்துனர் |
| தந்தை பெயர் | : துரைசாமி | சமயம் | : |
| கிராமம் | : மட்டப்பாறை | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 40 |

சாட்சியையும் எதிரியும் அனந்தபுரம் காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. திரு. E. ஜெயசங்கர் H.C - 1931 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

**1.** நான் மட்டப்பாறை கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 ஏகஜெனி எனக்கு உறவு முறையில் எனக்கு தங்கை. இவ்வழக்கில் இறந்துபோன வேணுகோபால் எனக்கு உறவுமுறையில் மச்சான்.

2. விபத்து நடந்த தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் இரண்டு வருடத்திற்கு முன்பாக மதியம்1,45 மணியளவில் மட்டப்பாறை அருகே சிகாமணி வீட்டருகில் பகோடா கடை பக்கத்தில் பாலம் உள்ளது அப்போது வேலூர் செல்லும் பஸ் மட்டப்பாறையில் கூட்ரோட்டில் நிற்காது வேகமாக செல்லும். சம்பவத்தன்று வேலூர் பஸ் விழுப்புரத்தில் இருந்து செஞ்சி நோக்கி மட்டப்பாறை வழியாக வந்தது. மேற்படி பகோடா கடை அருகே நின்று கொண்டிருந்த நான் திடீரென்று சத்தம் கேட்டு பார்த்தபோது வேலூர் பஸ் டயரில் ரேணுகோபால் மாட்டிக்கொண்டு முன் பக்கமாக அவரது இருசக்கர வாகனம் மாட்டிக்கொண்டும் அதற்கு பின்பாக ரேணுகோபால் உடல் மாட்டிக்கொண்டும், தேய்த்து கொண்டும் பஸ் வந்தது. சம்பவ இடத்திலேயே வேணுகோபால் இறந்துவிட்டார். போலிசார் வந்தார்கள். அந்த பஸ்ஸை அனந்தபுரம் போலிசார் எடுத்து சென்றார்கள். பேருந்து ஓட்டுனரை நான் பார்க்கவில்லை. போலிசார் விசாரித்தார்கள். இருச்ககர வாகனத்தை விபத்து ஏற்படுத்திய பேருந்தில் ஏற்றிக்கொண்டு பஸ்ஸை அனந்தபுரம் காவல்

நிலையத்திற்கு எடுத்து சென்றார்கள்.

**குறுக்குவிசாரணை:**

கடையில் நின்று கொண்டிருந்த இடத்தில் இருந்து எவ்வளவு தூரத்தில் விபத்து நடந்தது என்றால் நான் நின்றுகொண்டிருந்த இடத்தில் இருந்து 100 அடி தள்ளி முன்பாக நடந்தது. புண்ணியமூர்த்தி எப்போது வந்தார் என்றால் அதை நான் கவனிக்கவில்லை. நான் விபத்தை பார்த்தபோது அங்கு புண்ணியமூர்த்தி இருந்ததை பார்த்தேனா என்றால் கும்பலாக இருந்ததை நான் கவனிக்கவில்லை. விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் இருசக்கர வாகனம் முன்பாக மாட்டிக்கொண்டும் அதற்கு பின்பாக உடல் மாட்டிக்கொண்டும் பேருந்து வந்ததை மட்டும் தான் பார்த்தேன். வேணுகோபால் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் முன்பக்கம் மட்டும் சேதமானதா என்றால் வண்டி முழுவதும் சேதமாகி விட்டது. இருசக்கர வாகனம் பேருந்தின் எந்த வாக்கில் மாட்டி இருந்தது என்றால் குறுக்கால் வாட்டில் மாட்டி இருந்தது. பேருந்து எண்ணை பார்த்தேனா என்றால் இல்லை. அரசு பேருந்தை ஓட்டிய டிரைவரை பார்த்தேனா என்றால் இல்லை. இறந்துபோனவர் எனக்கு உறவினர் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வேணுகோபால் கவனக்குறைவாக இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்றால் அதை நான் பார்க்கவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.